# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **நாடகக்கலை**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# நாடகக்கலை

**நாடகக் கலைகள்:**

- ❖ நாடகம் எனும் சொல் நாடு+ அகம் எனப் பிரியும்.
- ❖ நாட்டை அகத்தில் கொண்டதே நாடகம்.
- ❖ நாட்டின் கடந்த காலத்தையும், நிகழ் காலத்தையும், வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் நாடகம் எனப் பெயர் பெற்றது.
- ❖ கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக் காட்டுவதும், கூத்தாக ஆடிக் காட்டுவதும் நாடகம் எனப் பெயர் பெற்றது.
- ❖ தமிழின் தொன்மையான கலை வடிவம் நாடகம் ஆகும்.
- ❖ முத்தமிழின் முத்தாய்ப்பாய் திகழ்வது - நாடகம்.
- ❖ நாடகத்தின் அடிப்படை பண்பு - போலச் செய்தல்
- ❖ பண்டைய மரப்பாவை கூத்து பொம்மலாட்டமாக வளர்ச்சி அடைந்த பின்னர் தோல் பாவைகூத்து, நிழற்பாவை கூத்து ஆகிய முறையே பாவை கூத்து வளர்ச்சி நிலைகளாக மக்களிடையே வழக்கில் இருந்தன.
- ❖ பாவை கூத்து முதல் பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்த நாடகம் நாட்டியமாகி, நாட்டிய நாடகமாகி இன்று நாம் காணும் புதிய நாடக உலகில் அடியெடுத்து வைத்துள்ளது.

**இலக்கியத்தில் நாடகம் பற்றிய குறிப்புகள்:-**

- ❖ நாடகம் என்ற சொல்லாட்சி இடம்பெற்ற நூல்- தொல்காப்பியம்.
- ❖ நாடக நூல்களான - முறுவல், சயந்தம், செயற்றியம், குண நூல், விளக்கத்தார் கூத்து, பரத சேனாதிபதியம், மதிவாணர் நாடகத் தமிழ் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ள உரை - அடியார்க்குநல்லார் சிலப்பதிகார உரை
- ❖ சிலப்பதிகாரத்தில் பாண்டுரங்கம், கொடுகொட்டி, மரக்கால், பாவை, துடி, குடை, அல்லியம், குடம், மல், பேடி, கடையம் எனும் பதினோறு வகையான கூத்துகளைஆடியவள் - மாதவி
- ❖ நாடக மேடையில் அமைக்கப்பட்டுள்ள திரைகள் - ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி

**பல்லவர் காலத்தில் நாடகம்:-**

- ❖ 7ஆம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் எழுதிய நாடக நூல் - மத்தவிலாச பிரகடனம்
- ❖ கி.பி. 1119 ல் கமலாயப் பட்டர் எழுதிய பூம்புலியூர் நாடகம் தான் ஆசிரியர் பெயர் தெரிந்த முதல் தமிழ் நாடகம்.

**சோழர்கள் காலத்தில் நாடகம்:**

- ❖ இராசராசேஸ்வர விஜயம் என்ற நாடகத்தின் மூலம் இராசராசசோழனின் வெற்றிகள் நாடகமாக்கப்பட்டன.

- இராசராசேஸ்வர விஜயம் என்ற நூலின் ஆசிரியர் - விஜய ராஜேந்திரன்
- குலோத்துங்க சோழன் நாடகம், பூம்புலியூர் நாடகம்
- சோழர்கள் காலத்தில் உய்ய வந்தால் யசோதை திருவிழாக் காலங்களில் நாடகம் நடிக்கும் உரிமைப் பெற்றிருந்தனர்.

### 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் நாடகம்:

- தஞ்சாவூரை மராட்டிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் கோவில்களில் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.
- 18ஆம் நூற்றாண்டில் அருணாச்சலக் கவிராயரின் இராமநாடகம், அசோமுகி நாடகங்கள் பாட்டு வடிவில் இயற்றப்பட்டன.
- 18ஆம் நூற்றாண்டில் பெரும்பாலான நாடகங்கள் மகாபாரதம், இராமாயணம் போன்ற காவியங்களின் கதைக் கூறுகளில் இருந்தே உருவாகின.
- சரபேந்திர பூபாளக் குறவஞ்சி நாடகம் தஞ்சையில் நடிக்கப்பட்டது.
- 18ஆம் நூற்றாண்டில் செல்வாக்கு பெற்றிருந்த நாடகங்கள் - குறவஞ்சி, பள்ளு, நொண்டி

### 19 ஆம் நூற்றாண்டில் நாடகம்:

- சமூக சீர்திருத்த நாடகங்கள் தோன்றிய காலம் - 19ஆம் நூற்றாண்டு ஆகும்.
- ஷேக்ஸ்பியரின் சிம்பலின் நாடகத்தை சத்தியாவதி என்ற பெயரில் மொழி பெயர்த்தவர் - இலக்குவணப் பிள்ளை. சாரசங்கி எனும் பெயரில் மொழி பெயர்க்கப்பட்டது.
- ஷேக்ஸ்பியரின் வெனிஸ் நாட்டு வணிகன், ரோமியோ ஜுலியட், ஒத்தெல்லோ ஆகிய நாடகங்கள் மொழிபெயர்க்கப்பட்டன.
- லோபி எனும் பிரெஞ்சு நாடகம் மொழி பெயர்க்கப்பட்டது.
- காளிதாசரின் சாகுந்தலத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் - மறைமலையடிகள்
- மிருச்சகடிகத்தை மண்ணியல் சிறுதேர் என்னும் பெயரில் மொழி பெயர்த்தவர் - பண்டிதமணி கதிரேசச் செட்டியார்.
- லிட்டன் பிரபு எழுதிய **The Secret way** எனும் ஆங்கிலக் கவிதையை மனோன்மணியம் எனும் பெயரில் மொழி பெயர்த்தவர் - பேராசிரியர் சுந்திரம் பிள்ளை.
- காசி விஸ்வநாதர் எழுதிய டம்பாச்சாரி விலாசம் என்ற நாடகம் 1867ல் வெளியிடப்பட்டது.
- டம்பாச்சாரி விலாசம் என்ற நாடகமே முதன் முதலில் மேடையில் நடிக்கப்பட்ட சமூக நாடகம் ஆகும்.
- வசனத்தில் அமைந்த முதல் நாடகம் - திண்டிவனம் இராமசாமி ராசுவின் பிரதாப சரித்திர விலாசம்.
- தமிழின் முதல் தேசிய சமுதாய நாடகம் -தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் எழுதிய கதரின் வெற்றி.
- தேசியக் கொடி எனும் நாடகத்தின் ஆசிரியர் - தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர்
- கலைகளின் அரசி என அழைக்கப்படுவது நாடகமாகும். தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது.

- ❖ இவற்றுள் நாடகம் தொன்மையும், தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும். இயலும், இசையும் கலந்து கதையைத் தழுவி நடித்துக் காட்டப்படுவது நாடகமாகும்.
- ❖ நாடகம் என்பதைக் குறிக்கும் டிராமா என்ற சொல், கிரேக்கச் சொல்லான ட்ரமோனியன் என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. இதன் பொருள் ஒன்றைச் செய் அல்லது ஒன்றைப் போல நடித்துக் காட்டு என்பதாகும்.
- ❖ எட்டு வகையான உணர்ச்சிகளை ஒருவர் தம் மெய்ப்பாடு தோன்ற நடிப்பது நாடகத்தின் தனிச்சிறப்பு.
- ❖ தொல்காப்பியர் நாடக வழக்கினும் உலகியல் வழங்கினும் என்று நாடகத்தைக் குறிப்பிடுகிறார். சிலப்பதிகாரம் நாடகக் கூறுகளுடன் நாடகக் காப்பியமாகவே திகழ்கிறது.
- ❖ நகையே அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப - தொல்காப்பியம்.
- ❖ அகத்தியம், குணநூல் கூத்தநூல், சயந்தம், மதிவாணர் நாடகத் தமிழர், முறுவல் போன்ற நாடக நூல்கள் பழந்தமிழர் வழக்கில் இருந்தன என்பதை சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். இவர் கூத்து வகைகள் பற்றியும், நாடக நூல்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.
- ❖ சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் நாடகமேத்தும் நாடகக் கணிகை என்று மாதவியைக் குறிப்பிடுகிறார்.
- ❖ சிலப்பதிகாரம் 11 வகை ஆடல்களையும், 8 வகை கூத்துகளையும் (அரங்கேற்று காதை) கூறுகிறது.
- ❖ மாயன் ஆடும் அல்லி, விடையோன் ஆடும் கொட்டி, ஆறுமுகன் ஆடும் குடை, குன்றெடுத்தோன் ஆடும் குடம், முக்கண்ணன் ஆடும் பாண்டரங்கம், நெடியோன் ஆடும் மல்லாடல், வேல்முருகன் ஆடும் துடியாடல், அயிராணி ஆடும் கடையம், காமன் ஆடும் பேரு, துர்க்கை ஆடும் மரக்கால், திருமகள் ஆடும் பாவைக்கூத்து ஆகியன 11 வகை ஆடல்கள்.
- ❖ நாடு "அகம்" நாடகம். நாட்டை அகத்துள் கொண்டது நாடகம். நாட்டின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால், நாடகம் எனப் பெயர் பெற்றது.
- ❖ மூன்று வகையான நாடக திரைச்சீலைகள் (எழினி) பற்றி சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையில் கூறப்பட்டுள்ளது. அவை ஒருமுக எழினி (ஒரு பக்கமாகச் சுருக்கிக் கட்டப்பட்ட திரை), பொருமுக எழினி (ஒரு திரை இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒன்றோடொன்று சேரவும் பிரிக்கவும் கூடியதாக அமைந்த திரை), கரந்துவரல் எழினி (மேலிருந்து கீழே விரிந்து விடவும் பின்னர் சுருக்கிக் கொள்ளவும் கூடிய திரை) ஆகியன.
- ❖ பரத நான்முறை நாடகம் பயனுறப் பகுப்பன் - என்றவர் கம்பர்.
- ❖ நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி என்பது முற்றிலும் பொருந்தும்.
- ❖ நாடகம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் தொல்காப்பியர். நாடகக் கலையின் முற்காலத் தொடக்கம் மரப்பாவைக் கூத்து ஆகும்.

- கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக் காட்டுவதும், கூத்தாக ஆடிக்காட்டுவதும் நாடகம் என்பர். இதற்கு கூத்துக்கலை என்னும் பெயரும் உண்டு.
- தமிழின் தொன்மையான கலை வடிவம் நாடகம். நாடகம் என்பது போலச் செய்தல் என்னும் பண்பை அடிப்படையாகக் கொண்டது.
- சங்க காலத்தில் நாடகவியலை வேத்தியல் என்றும் பொதுவியல் என்றும் இரண்டாகப் பிரிப்பர். வேத்தியல் என்பது வேந்தர்களுக்கு உரிய நாடகங்கள் எனவும், பொதுவியல் என்பது பொது மக்களுக்குரிய நாடகங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை அகக்கூத்து (வேத்தியல்), புறக்கூத்து (பொதுவியல்) என்றும் அழைப்பர்
- பிறர் செய்வதைப் போல தாமும் செய்து பார்க்க வேண்டும் என்ற மனித உணர்ச்சி தான் நாடகம் தோன்றக் காரணம்.
- மரப்பாவைக் கூத்து , பொம்மலாட்டம், தோல்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து என நாடகம் வளர்ச்சி அடைந்தது.
- தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் நாடகப் பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்துள்ளது.
- கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம் போக்கும் அதுவிளிந் தற்று - என்று திருவள்ளுவர் தம் குறள் வழியே நாடக அரங்கு பற்றிய செய்தியைக் கூறுகிறார்.
- தனிப்பாடல்களுக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடுவதை நாட்டியம் என்றும், ஏதேனும் ஒரு கதையைத் தழுவி வேடம் புனைந்து ஆடுவதை நாடகம் என்றும் குறிப்பிட்டு வந்துள்ளனர்.
- நாட்டியம், நாடகம் இரண்டிற்கும் பொதுவாகக் கூத்து என்ற சொல்லே வழக்கில் இருந்தது.
- முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், விளக்கத்தார் கூத்து, குணநூல், கூத்து நூல் முதலிய பல நாடக நூல்கள் நாடகத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளன.
- அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையில் பெருநாரை, பெருங்குருகு, இசைநுணுக்கம், பஞ்சமரபு முதலான இசை இலக்கண நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- பாரதிதாசன் எழுதிய நாடக நூல் இரணியன் அல்லது இணையற்ற வீரன்.
- திருப்பாதிரி புலியூர் சிவன் கோயிலில் புலியூர் நாடகம் என்ற (கமலாலய பட்டர் இயற்றிய நாடகம்) நாடகம் நடத்தப்பட்டது.
- திண்டிவனம் ராமசாமி இயற்றிய பிரதாப சரித்திர விலாசம் என்ற நாடகமே முழுவதும் வசனத்தில் அமைந்த முதல் நாடகமாகும்.
- பரிதிமாற் கலைஞர் செய்யுள் வடிவில் இயற்றிய தம் நாடகவியல் என்னும் நூலில் நாடகம், அதன் விளக்கம், வகைகள், எழுதப்பட வேண்டிய முறைகள் பற்றிக் கூறியுள்ளார்.
- சுவாமி விபுலானந்தர் எழுதிய மதங்க சூளாமணி, மறைமலையடிகள் எழுதிய சாகுந்தலம் ஆகிய இரண்டும் நாடகம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்
- பம்மல் சம்பந்தனார், நாடகத்தமிழ் என்ற தம் நூலில் தொழில் முறை நாடக அரங்குகளைப் பற்றிய செய்திகளை நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார்.
- தமிழில் கூறப்படும் ஏழிசைகள்: உழை, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை ஆகியன.

- ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் மத்தவிலாசம் என்ற நாடக நூலை எழுதியுள்ளார்.
- 11-ம் நூற்றாண்டில் இராசராச சோழன் ஆட்சிக் காலத்தில் இராசராசேச்சுவர நாடகம் நடைபெற்றதாக தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதில் நடித்தவர்களுக்கு இராசராச நாடகப்பிரியன் என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- நாயக்க மன்னர்கள் காலத்தில் குறவஞ்சி நாடகங்களும், 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நொண்டி நாடகமும், பள்ளு வகை நாடகங்களும் தோன்றின.
- சீதக்காதி நொண்டி நாடகம், இரத்தக் கண்ணீர் போன்றவை நாடக வகையைச் சேர்ந்தவை. சரபேந்திர பூபாளக் குறவஞ்சி நாடகம் தஞ்சையில் நடத்தப்பட்டது.
- 18-ம் நூற்றாண்டில் அருணாச்சலக் கவிராயரின் இராம நாடகம், கோபால கிருட்டிண பாரதியின் நந்தனார் சரித்திரம் ஆகியன கட்டியங்காரன் உரையாடலோடு முழுவதும் பாடல்களாக அமைந்தன.
- காசி விஸ்வநாதரின் டம்பாச்சாரி விலாசம், பேராசிரியர் மீனாட்சி சுந்தரனாரின் மனோன்மணியம் போன்றவை சமுதாய சீர்திருத்த நாடகங்கள் ஆகும்.
- காசி விஸ்வநாதரின் டம்பாச்சாரி விலாசமே மேடையில் நடிக்கப்பட்ட முதல் சமூக நாடகம்.
- தெ.பொ.கிருஷ்ணசாமியின் கதரின் வெற்றி என்ற நாடகம் தான் தமிழகத்தில் முதன் முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகம். இதனைத் தொடர்ந்து தேசியக் கொடி, தேசபக்தி முதலிய நாடகங்கள் நடத்தப்பட்டன.
- அரிச்சந்திரன், கோவலன், வள்ளி திருமணம் தேசிங்குராஜன் போன்ற நாடகங்களை தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் எழுதியுள்ளார். இவர் பால மனோகரா என்னும் நாடக சபையை நிறுவினார்.
- நாடகக் கலைமணி நால்வர் - டி.கே.சண்முகம், டி.கே.சங்கரன், டி.கே.முத்துச்சாமி, டி.கே.பகவதி ஆகியோர்.
- பரிதிமாற் கலைஞர் எழுதியது நாடக இயல். மறைமலை அடிகள் எழுதியது சாகுந்தல நாடக ஆராய்ச்சி. பம்மல் சம்பந்தனார் எழுதியது நாடகத் தமிழ்.
- பேரறிஞர் அண்ணா சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்ஜியம் என்ற நாடகத்தை எழுதியுள்ளார்.
- குலோத்துங்க சரிதை என்பது முதலாம் குலோத்துங்கன் பற்றிய நாடகம்.
- நாடகக் காவலர் என அழைக்கப்பெற்ற ஆர்.எஸ்.மனோகரின் இலங்கேஸ்வரன் என்ற நாடகத்தின் மூலம் தமிழ் நாடகக்கலை மிகவும் பிரபலமடைந்தது.
- பரிதிமாற் கலைஞர் - தமிழ் நாடகப் பேராசிரியர்.
- நாடகம் படித்தல், நடித்தல், இலக்கணம் வகுத்தல் என மூன்று பெரும் பணிகளை ஆற்றியவர் பரிதிமாற் கலைஞர். நாடகவியல் என்ற தமிழ் நாடக நூலையும் பரிதிமாற்கலைஞர் இயற்றினார். இவர் படைத்த நாடகங்களுள் ரூபாவதி, கலாவதி, மானவிஜயம், சூர்ப்பனகை ஆகியன குறிப்பிடத்தக்கவை.
- அம்பிகாபதி அமராவதி என்ற நாடகத்தை இயற்றியவர் மறைமலையடிகள். தெள்ளாறு எறிந்த நந்தி என்ற நாடகத்தை இயற்றியவர் அ.ச.ஞானசம்பந்தன்.
- பிசிராந்தையார் நாடகத்தை இயற்றியவர் பாரதிதாசன்.

- சங்கரதாஸ் சுவாமிகள் - தமிழ் நாடக உலகில் இமயமலை, தமிழ் நாடகத் தலைமையாசிரியர்.
- பம்மல் சம்பந்தனார்- தமிழ் நாடகத் தந்தை
- கந்தசாமி - தமிழ் நாடக மறுமலர்ச்சித் தந்தை, புதிய நடிப்புக் கலை ஆசிரியர், மேனாட்டு நாடக முறைகளைத் தமிழில் புகுத்தியவர்.
- மேடை நாடக அமைப்புக்கு முன்மாதிரியான, நவாப் கோவிந்தசாமி ராவ் அவர்களை தமிழ் நாடகத்தின் தாத்தா என அழைப்பர்.
- நாடகச் சாலையொத்த நற்கலாசாலையொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து என்ற கவிமணியின் கூற்றிற்கு ஏற்ப மக்களின் கண்ணை, செவியைக், கருத்தைக் கவரும் வகையிலும், நாடகங்கள் கதை அழகோடு கவிதை அழகையும் கொண்டு வாழ்வைத் தூய்மைப்படுத்தும் வகையிலும் அமைதல் வேண்டும்.

சங்கரதாஸ் சுவாமிகள்

- நாடக உலகின் இமயம் என்றும், தமிழ்நாடகத் தலைமையாசிரியர் என்றும் அழைக்கப்படும் சங்கரதாஸ் சுவாமிகள் சுமார் 40 நாடகங்களை இயற்றியள்ளார். இவரது காலம் 1867-1920.
- வள்ளி திருமணம், கோவலன் சரித்திரம், சதி சுலோசனா, இலவகுசா, பக்தப்பிரகலாதன், நல்லதங்காள், சதி அனுசுயா, வீர அபிமன்யு, பவளக்கொடி, பிரகலாதன், சிறுதொண்டர் ஆகியன சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய நாடகங்களில் சில.
- சங்கரதாஸ் சுவாமிகள் ஒரே இரவில் எழுதி முடித்த நாடகம் வீர அபிமன்யு.
- மாபாவியோர் கூடி வாழும் மாநகருக்கு மன்னா போகாதீர் - எனப் பாடினார். இங்கு மா என்பது அலைமகளையும், பா என்பது கலைமகளையும், வி என்பது மலைமகளையம் குறிக்கும். இது திருவிளையாடற்புராணச் சான்று.
- துடிப்பிருக்கும் சங்கரதாஸ் சுவாமி எழுத்தில் எல்லாம் சுவை சொட்டும் சந்தநயம் தோய்ந்திருக்கும் - என்று புத்தனேரி சுப்ரமணியம் சங்கரதாஸ் சுவாமிகளைப் புகழ்ந்துள்ளார்.
- மதுரை தத்துவ மீனலோசன வித்துவ பாலசபா என்ற நாடக சபையை நடத்தியவர் சங்கரதாஸ் சுவாமிகள்.

**பம்பல் சம்பந்தனார்**

- பம்பல் சம்பந்தனார் (பம்பல் சம்மந்த முதலியார்), சங்கரதாஸ் சுவாமிகள், பரிதிமாற் கலைஞர் ஆகிய மூவரையும் தமிழ்நாடக மூவர் என அழைப்பது வழக்கம். இம்மூவருமே 20-ம் நூற்றாண்டில் நாடகத் தமிழில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர்கள்.
- பம்பல் சம்பந்தனார் எழுதிய மொத்த நாடகங்கள் 93. தமிழ் நாடகத் தந்தை எனப்படும் பம்பல் சம்பந்தனாரை தமிழ் ஷேக்ஸ்பியர் என்றும் அழைப்பர்.
- இவர் 1891-ம் ஆண்டு தனது 18-ம் வயதில் சுகுணவிலாச சபையைத் தொடங்கினார்.

- நடிகர்களால் கவிஞர் என மதிக்கப்பட்ட பம்பல் சம்பந்தனார் மனோகரா, யயாதி, சிறுத்தொண்டன், கர்ணன், சபாபதி, பொன்விலங்கு போன்ற நாடகங்களை இயற்றியுள்ளார்.
- பம்பல் சம்பந்தனார் ஷேக்ஸ்பியரின் நாடகங்களைத் தழுவி வாணிபுரத்து வணிகன், விரும்பிய விதமே, அமலாதித்தியன், மேக்பெத், சிம்பெலின் முதலிய தமிழ் நாடகங்களைப் படைத்தார்.
- ரத்னாவளி, வேதாள உலகம், சபாபதி, கள்வர் தலைவன், இரண்டு நண்பர்கள் போன்ற நாடகங்களையும் இவர் எழுதியுள்ளார்.
- பம்பல் சம்பந்தனாரின் மனோகரா நாடகம் 70 ஆண்டுகளாகத் தமிழ் நாடக மேடையில் புகழ்பெற்று விளங்கியது.
- நீதிபதியாகப் பணியாற்றிய பம்மல் சம்மந்தனாரின் முதல் நாடகம் புஷ்பவல்லி என்பதாகும். இதனை தனது 18-ம் வயதில் இயற்றினார்.
- தனது நாடக அனுபவங்களையெல்லாம் நாடக மேடை என்ற தலைப்பிலும், நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி? என்றும் நூலாக எழுதியுள்ளார்.
- பம்மல் சம்பந்தனார் நாடகத் தமிழ் என்ற நூலையும் எழுதியுள்ளார்.
- கேளிக்கை நாடகம் என்ற வகையினையும், நாடக நையாண்டியையும் தமிழ் நாடக உலகுக்கு அறிமுகம் செய்தவர் பம்மல் சம்பந்தனார்.